# டான்ஃபாக் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

TANFAC

பதிவு அலுவலகம் : 14, சிப்காட் தொழிற்பேட்டை வளாகம்,
கடலூர் - 607 005, தமிழ்நாடு. TEL: 04142-239001 TO 239005 FAX: 04142-239008
website: www.tanfac.com Email id: tanfac.invreln@anupamrasayan.com
CIN: L24117TN1972PLC006271

## 48வது வருடாந்திர பொதுக்கூட்டம், புத்தகம் மூடல் அறிவிப்பு மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு / மின்னணு வாக்குப்பதிவு பற்றிய தகவல்

23 ஆகஸ்ட் 2022 தேதியிட்ட வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல் இனங்களை செயல்படுத்த டான்பாக் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டின் 48வது வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM) திங்கட்கிழமை, 26 செப்டெம்பர் 2022 அன்று மதியம் 12.00 மணிக்கு காணொளி காட்சி (VC) / இதர ஒளி, ஒலி சாதனங்கள் (OAVM) மூலம் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கம்பெனிகள் சட்டம் 2013ன் பொருந்தக்கூடிய பிரிவுகள் மற்றும் அதன் கீழுள்ள விதிகள் (சட்டம்), செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (செபி) (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதிகள் மற்றும் இந்திய அரசின் கம்பெனி விவகாரங்கள் அமைச்சகத்தினால் (எம்சிஏ) வெளியிடப்பட்ட 5 மே, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 20/2020, 8 ஏப்ரல் 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 14/2020 மற்றும் 13 ஏப்ரல் 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 17/2020 மற்றும் 13 ஏப்ரல், 2020 மற்றும் 13 ஜனவரி 2021 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 02/2021 தேதியிட்ட செபியினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 மற்றும் 12 மே, 2020 மற்றும் 15 ஜனவரி, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 மற்றும் 13 மே, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62ன்படி கார்ப்பரேட் விவகார அமைச்கம் / செபியினால் (கூட்டாக எம்சிஏ மற்றும் செபி சுற்றறிக்கைகள்) வருடாந்திர பொதுக்கூட்டம் கூட்டப்படுகிறது.

மேற்கண்ட விதிமுறைகளுக்கு இணங்க, 48வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை 2 செப்டெம்பர் 2022 அன்று (இந்த நோக்கத்திற்காக 'கட் ஆப் தேதி') கிடைக்கும் முதன்மை தரவுகளின்படி கம்பெனி / வைப்புத்தொகை பங்கேற்பாளரிடம் ஏற்கனவே செல்லுபடியாகும் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த பங்குதாரர்களுக்கு மட்டுமே மின்னஞ்சல் அனுப்பப்பட்டுள்ளன. உறுப்பினர்களுக்கு வருடாந்திர அறிக்கையை மின்னணு முறையில் அனுப்பும் பணி 3 செப்டெம்பர், 2022 சனிக்கிழமையன்று நிறைவடைந்துள்ளது.

06 மே 2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில் கம்பெனியின் இயக்குனர்கள் குழு பரிந்துரைத்த ஒரு ஈக்விட்டி பங்கிற்கு ரூ.5.50/- ஈவுத்தொகையை நடைபெறவிருக்கும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டால் 19 செப்டெம்பர் 2022 அன்று தகுதி உள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும். உறுப்பினர்களின் பதிவு, டீமெடீரியலைஸ் செய்யப்பட்ட வடிவத்தில் வைத்திருக்கும் பங்குகளுக்கான ஈவுத்தொகை, அந்த அதேதியில் நன்மை பயக்கும் உரிமையாளர்களாக நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் ஆகியவற்றால் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.

48வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2021-22ம் நிதியாண்டிற்கான வருடாந்திர அறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளம் www.tanfac.com, ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் www.bseindia.com மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (சிடிஎஸ்எல்) இணையதளம் www.evotingindia.comல் கிடைக்கிறது.

**வருடாந்திர பொதுக்கூட்டத்தின் போது தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு / மின்னணு வாக்குப்பதிவிற்கான வழிமுறைகள் :**

கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 108 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, விதி 20 மற்றும் செபி (எல்ஓடிஆர்) விதிகள் 2015, விதி 44ன்படி. வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது வழங்கப்பட்ட AGM (Insta Poll)ன் மூலம் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு / மின்னணு வாக்குப்பதிவு வசதியை கம்பெனி தனது உறுப்பினர்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறது. வருடாந்திர பொதுக்கூட்டத்திற்கு முன்னர் வாக்களித்த உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கலாம். ஆனால் மீண்டும் வாக்களிக்க தகுதி கிடையாது.

மின்னணு வாக்குப்பதிவிற்கான கட் ஆப் தேதி அதாவது 19 செப்டம்பர் 2022 அன்று உறுப்பினர்கள் பதிவேடு / வைப்பாளர்களால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்கள் பதிவேட்டில் கண்டுள்ள பெயர்களில் உள்ள உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு / மின்னணு வாக்குப்பதிவு வசதியை பெற தகுதி உடையவர்கள் ஆவார்கள். 48வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பின் சாப்ட் நகலை மின்னஞ்சல் மூலம் அனுப்பிய பிறகு ஆனால் வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு / மின்னணு வாக்குப்பதிவிற்கு கட் ஆப் தேதியான 19 செப்டெம்பர் 2022க்கு முன்னரோ பங்குகளை பெற்று கம்பெனியின் உறுப்பினரான ஒரு நபர் மின்னணு வாக்குப்பதிவிற்கான நடைமுறையை அறிய https://www.evotingindia.comல் உள்நுழையலாம் அல்லது corpserv@integratedindia.inக்கு அஞ்சல் செய்யலாம்.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பு எண்.27ல் வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு / மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களிப்பதற்கான முறை விரிவாக அனுப்பப்பட்டுள்ளது. மேலும், கம்பெனியின் இணையதளம் www.tanfac.com மற்றும் CDSL இணையதளம் https://www.evotingindia.comல் வெளியிடப்பட்டுள்ளது. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வெள்ளிக்கிழமை, 23 செப்டெம்பர் 2022 அன்று காலை 9.00 மணிக்கு துவங்கி ஞாயிற்றுக்கிழமை, 25 செப்டெம்பர் 2022 அன்று மாலை 5.00 மணிக்கு (EVSN 220819008) முடிவடைகிறது. மேற்சொன்ன தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் உறுப்பினர்கள் தங்களது வாக்குகளை பதிவு செய்ய தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முறை நிறுத்தப்படும். மேலே குறிப்பிட்டுள்ளபடி மின்வாக்களிப்பு காலத்தில் வாக்களிக்காத உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது Insta Poll மூலம் மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதியைப் பெறலாம்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு சம்பந்தமாக ஏதேனும் கேள்விகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அது குறித்து உறுப்பினர்கள் உதவிப்பிரிவின் கீழுள்ள www.evotingindia.comல் கிடைக்கும் ''தங்கள் வாக்குகளை அளிக்க பங்குதாரர்களுக்கான பயனர் கையேடு'' மற்றும் ''எம்-வோட்டிங் மூலமாக பங்குதாரர்கள் வாக்களிப்பதற்கான பயனர் கையேடு'' ஆகியவற்றை பார்வையிடலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.comக்கு மின்னஞ்சல் அனுப்பலாம். துணை மேலாளர், சிடிஎஸ்எல், 16வது மாடி, பிரோஸ் ஜீஜீபாய் டவர்ஸ், தலால் தெரு, போர்ட், மும்பை - 400 001, மின்னஞ்சல் : helpdesk.evoting@cdslindia.com கட்டணமில்லா எண் 1800 200 5533ல் அணுகலாம்.

**புத்தகம் மூடல் :**

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 91 மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 42-ன்படி கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள் செவ்வாய்க்கிழமை 20, செப்டெம்பர் 2022 முதல் திங்கட்கிழமை 26, செப்டெம்பர் 2022 முடிய (இரு நாட்களும் உள்பட) மூடப்பட்டிருக்கும்.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள அனைத்து குறிப்புகளையும் குறிப்பாக, வருடாந்திர பொதுக்கூட்டத்தில் சேருவதற்கான வழிமுறைகள் தொலை தூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்கும் முறை (Insta Poll) பற்றி கவனமாக படிக்குமாறு பங்குதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

போர்டு உத்தரவின்படி
டான்ஃபாக் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டிற்காக
H. நாராயணராவ்
கம்பெனி செயலாளர்

கடலூர்
03.09.2022